## ‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் –

# எழுத்தாளர் ப.திருமாவேலன் புதல்வி மணவிழா!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை! உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

**சென்னை, செப்.6-**

**‘கலைஞர் தொலைக்காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் ப.திருமாவேலன் புதல்வி மணவிழா நாளை (செப்.7) சென்னை திருவான்மியூர் ராமச்சந்திரா கன்வென்ஷன் அரங்கில் நடைபெறுகிறது. மணவிழா வரவேற்பு இன்று (செப்.6) மாலை நடைபெறுகிறது.**

**இம்மண விழா பற்றிய விவரம் வருமாறு:-**



புலவர் மு.படிக்கராமு - ப.முத்து லக்குமி, சு.கிருஷ்ணன் - கி.அழகம்மாள் ஆகியோரின் பேத்தியும், ‘கலைஞர் தொலைக் காட்சி’ செய்திகள் பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் ப.திருமாவேலன் - ரேணுகா திருமாவேலன் இணையரின் புதல்வியுமான டாக்டர் ரே.தி. அமிர்தாவுக்கும், கா.சுந்தரம் - சு. லட்சுமி, இரா.பாண்டியராஜன் - பா.இராணி அம்மாள் ஆகியோரின் பேரனும், டாக்டர் சு.பால சுப்பிரமணியன் - சுதா பாலசுப்பிரமணியன் இணையரின் புதல்வருமான டாக்டர் பா.ரவீந்திரனுக்கும் மணவிழா நாளை 7.9.2026 - திங்கள்கிழமை காலை 9.15 மணியளவில் சென்னை திருவான்மியூர் ராமச் சந்திரா கன்வென்ஷன் அரங்கில் நடைபெறுகிறது.

இம்மண விழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணவிழாவிற்கு முன்னிலை வகிக்கின்றார்.

புலவர் மு.படிக்கராமு திருக்குறள் நெறி நிகழ்த்துகிறார்.

முன்னதாக - மணவிழா வரவேற்பு இன்று (6.9.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மண விழாவிலும் - மண விழா வரவேற்பிலும் கழக முன்னணியினர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊடகத் துறையினர், பல்வேறு துறைகளின் முன்னணிப் பெருமக்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில், கடையநல்லூர் தி.மு.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தமது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

---

## விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க

# பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுக!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, செப். 6-

விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக பாசநாசம் அணையிலிருந்து 1500 கன அடி தண்ணீரை திறந்து அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

பாபநாசம் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கக் கோரி, நியாயமான உரிமைக்காகப் போராடிய தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளை அராஜகமாகக் கைது செய்துள்ள த.வெ.க. அரசின்



கொடுங்கோன்மை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தாமிரபரணி ஆற்றுப்பாசனத்தை சார்ந்துள்ள சுமார் 5,000 ஏக்கர் வாழைப் பயிர்கள் தண்ணீரின்றி கருகும் நிலையில், விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. பலமுறை மனு அளித்தும், தொடர் போராட்டங்கள் நடத்தியும் மாவட்ட நிர்வாகமும் நீர்வளத்துறையும் நடவடிக்கை எடுக்காமல், விவசாயிகளை சாலையில் போராடும் நிலைக்குத் தள்ளியுள்ளது, இந்த அரசு.

விவசாயிகளின் கோரிக்கையை உடனடியாக ஏற்று, பாபநாசம் அணையிலிருந்து 1,500 கனஅடி தண்ணீரை திறந்துவிட்டு, அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தி உள்ளார்.

---

## கடையநல்லூர் — செங்கோட்டை நகரங்களில்

# போக்குவரத்து காவல் பிரிவை அமைத்திடுக!

### சட்டப் பேரவையில் கடையநல்லூர் தி.மு.இராஜேந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, செப்.6-

கடையநல்லூர் - செங்கோட்டை நகரங்களில் போக்குவரத்து காவல் பிரிவை அமைத்திட வேண்டும் என்று சட்டப் பேரவையில் தி.மு. இராஜேந்திரன் பேசிய போது குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவின் ஐயப்பன் கோவிலுக்கும், திருக்குற்றால மலை நீர் வீழ்ச்சிக்கும் வருகின்ற பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஒரு கோடியா



கும். அவர்கள் கடந்து செல்கின்ற நகரங்கள், கடையநல்லூர் மற்றும் செங்கோட்டை. இரண்டு நகரங்களிலும் போக்குவரத்து காவல் பிரிவை அமைத்திட வேண்டுமென வலியுறுத்துகிறேன். அதேபோல், தமிழ்நாட்டில் 277 காவல் உட்கோட்டங்கள் இருப்பதாக நமது கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தொகுதிகள் 234. இதில் மாநகர பகுதியில், சுமார் மாநகர காவல் எல்லைக்குள் 40 சட்டமன்றத் தொகுதிகள் வரக்கூடும். சுமார் 190 தொகுதிகள் ஊரகப் பகுதிகளில் இருக்கின்றன. ஒரு தொகுதிக்கு ஒரு DSP அலுவலகம் என்கிற அளவில், நிர்வாக மறுசீரமைப்பு செய்ய முடியுமா என்பதை அரசு ஆய்வு செய்ய வேண்டும்.

தற்போது உதாரணத்திற்கு புளியங்குடியில் இருக்கிற DSP limit என்பது வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் தொகுதி, கடையநல்லூர் தொகுதியின் ஒரு பகுதியாக அமையப் பெற்றிருக்கிறது. ஆகவே, எந்தளவிற்கு இதில் வாய்ப்பிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு ஆய்வு செய்யுமாறு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக கருத்தைப் பதிவு செய்கிறேன்.

இவ்வாறு தி.மு. இராஜேந்திரன் பேசினார்.

---

# சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், செப். 6-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-

சேலம் மத்திய மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் தலைமைக் கழக பிரதிநிதி நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் கிரிராஜன் அவர்கள் தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதி தகவல் தொழில்நுட்ப அணி



துணை செயலாளர் அழகிரி சதாசிவம் அவர்கள் முன்னிலையிலும் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் மாளிகையில் 08.09.2026 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட மறுசீரமைப்பு பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## தலைவர் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் மலர தீவிர களப்பணியாற்றுவோம்!

# சென்னை - முப்பெரும் விழாவில் திரளாகப் பங்கேற்போம்!

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தீர்மானம் – மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!

காஞ்சிபுரம், செப்.6-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் உத்திரமேரூர் பிரியா மஹாலில் மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் கே.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தொடக்கத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் அனைவரையும் வரவேற்று பேசினார்.

காஞ்சிபுரம் மாவட்ட தலைமைக் கழகப் பிரதிநிதிகள் என். மருது கணேஷ், திருமதி இராணி ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

இதில் மாவட்ட துணை செயலாளர் க. செல்வம் எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.எஸ். சுகுமார், எஸ்.ஆர். அப்பாதுரை, மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாநில தொண்டரணி ஜி. சுகுமாரன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் திருமதி நித்யா சுகுமார், பொதுக் குழு உறுப்பினர்கள் பொன்.சசிகுமார், எஸ். சிகாமணி, திருமதி எஸ். எழிலரசி, ஒன்றிய செயலாளர்கள் கே.ஞானசேகரன், பி.எம். குமார், கா. குமணன், டி. குமார், பி.எம். பாபு, பி.சேகர், ஒன்றிய குழு தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், பகுதி செயலாளர்கள் எஸ். சந்துரு, கே. திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், காஞ்சிபுரம் மாநகர நிர்வாகிகள் கே.ஏ.செங்குட்டு வன், ஏ.எஸ். முத்து செல்வம், வ.ஜெகநாதன், கே. சுப்பராயன், பேரூர் செயலாளர்கள் என்.எஸ். பாரிவள்ளல், என்.பாண்டியன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ. யுவராஜ், ஆ.செல்வி, நாத்திகம் நாகராஜன், வ. மலர் மன்னன், இ.அசோகன், டி. வெங்கட்ராமன், ஆ. சசிகுமார், ஜெய்கணேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெ.மணி, டி.சஞ்சய் காந்தி, எம்.அருள் முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நமது கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் வரும் செப்டம்பர் 15 திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவில் அண்ணா பிறந்த நாள் பெரியார் பிறந்த நாள் கழகம் பிறந்தநாள் ஆகிய மூன்று நாட்களையும் ஒன்றிணைத்து நடைபெறும் முப்பெரும் விழாவில் நமது மாவட்ட கழகத்தின் சார்பில் அனைவரும் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.

22.8.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கழக மறுசீரமைப்பு சம்மந்தமான தீர்மானங்களின்படி நாம் அனைவரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக செயல்பட்டு மின்மினிப் பூச்சி ஆட்சியை அகற்றிவிட்டு மீண்டும் திராவிட மாடல் ஆட்சியை உருவாக்கி கழகத் தலைவர் அவர்களை தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் ஆக்கிட கழகப் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பது என தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## சகோதரரைத் தாக்கிய வழக்கில்

# புதுச்சேரி நீதிமன்றத்தில் த.வெ.க. அமைச்சர் மரியவில்சன் ஆஜர்!

புதுச்சேரி, செப். 6-

சகோதரர் மற்றும் அவரது குடும்பத்தினரை கொடூரமாக தாக்கிய வழக்கில், உயர்நீதிமன்றத்தின் கண்டனத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு நிதியமைச்சர் மரியவில்சன் புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜரானார்.

வீடு புகுந்து தனது சகோதரர் மரிய கிளோத் மற்றும் அவரது மனைவி கேரளின் ஆகிய இருவரையும் தவெக அமைச்சர் மரியவில்சன் உருட்டுக்கட்டையால் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்த வீடியோ சமூகவலைத்தளங்களில் வைரலாகியது. இதில், காயமடைந்த மரிய கிளோத் மற்றும் அவரது மனைவி கேரளின் ஆகியோர் லாஸ்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

இதன்பேரில் பல்வேறு பிரிவுகளின் கீழ் மரியவில்சன் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கின் விசாரணை புதுச்சேரி முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

பலமுறை வாய்தா வழங்கப்பட்ட போதிலும், அமைச்சர் மரிய வில்சன் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இழுத்தடித்து வந்தார்.

இதற்கு நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது. மரியவில்சன் தமிழ்நாட்டின் நிதியமைச்சர் மட்டும்தான் என்றும், இங்கிலாந்தின் மன்னர் அல்ல என்றும் நீதிமன்றம் சாடியது. நேரில் ஆஜராகவில்லையென்றால் பிடிவாரண்ட் பிறப்பிக்கப்படும் என்றும் நீதிமன்றம் எச்சரித்தது.

இந்நிலையில், புதுச்சேரி முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் மரிய வில்சன் நேற்று முன்தினம் நேரில் ஆஜரானார். அப்போது, வழக்கு தொடர்பான குற்றப் பத்திரிகையை அவர் பெற்றுக் கொண்டார். இதனையடுத்து வழக்கு விசாரணையை, வரும் 9ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி சந்திரசேகர் உத்தரவிட்டார்.




திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன்.எம்.பி., தலைமை கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி.எழிலரசன், டாக்டர் பி.எம்.யாழினி, கோ.கண்ணன், இரா.ராஜசேகர், ஆர்.சிவானந்தம், இரா.ஸ்ரீதரன், கே.வி.ராஜ்குமார், பொன்.முத்து, மு.பெ.கிரி, ஸ்.அம்பேத்குமார்.எம்.எல்.ஏ., பெ.சு.தி.சரவணன், வ.அன்பழகன், ஆர்.வேல்முருகன், ந.பாண்டுரங்கன், க.லோகநாதன், எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, பிரியா.விஜியரங்கன், ஒ.ஜோதி, ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் காஞ்சிபுரம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட். கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட தலைமைக் கழக பிரதிநிதிகள் என். மருது கணேஷ், திருமதி இராணி ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர், மாவட்ட துணை செயலாளர் க.செல்வம் எம்.பி. உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் உடன் இருந்தனர்.